## அடுத்த தலைமுறை வளமோடு வாழ திட்டங்களை தீட்டி –

# தமிழ்நாட்டு மக்களின் பாதுகாவலராக - மனித நேயராக இருப்பவர் முதல்வர்!

### சென்னை கிழக்கு மாவட்டத்தில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில் – முதல்வர் பிறந்த நாள் விழாவில் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. பேச்சு!

**சென்னை, ஏப். 18 -**

**அடுத்த தலைமுறை வளமோடு வாழ்வதற்கு திட்டங்களை தீட்டி வருகிறார் முதல்வர் என்றும், தமிழ்நாட்டு மக்களின் பாதுகாவலராக - மனித நேயராக இருப்பவர் முதல்வர் என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற முதல்வர் பிறந்த நாள் விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.**

சென்னை கிழக்கு மாவட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னெடுப்பில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72-வது பிறந்த நாள் விழாவில், கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. பேசியதாவது:-

'மனிதநேய விழா' என்பது யாருக்கெல்லாம் எடுக்கப்பட்டிருக்கிறது? இது எவ்வாறு முதலமைச்சருக்கு பொருந்தும்? என்று ஒரே ஒரு வரியில் முடிக்கலாம். பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மனிதநேயத்தோடு மதிய உணவைக் கொண்டு வந்தார். அதே மனிதநேயத்தோடு, தமிழ்நாட்டில் உள்ள எத்தனை பிள்ளைகள் காலை உணவு அருந்தாமல் பள்ளிக்குச் செல்கின்றனர்? இதனால் அவர்களுக்கு எவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்படுகிறது? என்று ஒரு மருத்துவராய் ஒரு தாயாய் ஒரு தலைவனாய் ஒரு முதல மைச்சராய் அதை உட்கொண்டு, காலை உணவை நான் அளிப்பேன் என்று, அளிக்காத வாக்குறுதியை நிறைவேற்றி குழந்தைகளின் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறார்.

**முதலமைச்சரின் மனிதநேயம்!**

ஏன், இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சிந்தனை, நம்முடைய முதலமைச்சருக்கு வந்தது? மதிய உணவு திட்டம், அனைத்து மாநிலங்களிலும் இருக்கிறது. இந்தியாவின் எந்த மாநிலத்திலும் காலை உணவு திட்டம்கிடையாது. முதலமைச்சருக்கு ஏன் இது வந்தது என்றால், அங்குதான் மனிதநேயத்தோடு நிமிர்ந்து நிற்கிறார் நம்முடைய முதலமைச்சரான தாயுமானவர்.

எனவேதான், நம்முடைய அமைச்சர், முதலமைச்சருடைய பிறந்தநாள் விழாவிற்கு எந்தத் தலைப்பை வைக்கலாம் என்று யோசித்தபோது, 'மனிதநேயம்' என்று கிடைத்திருக்கிறது.

குழந்தைகள் மீது மட்டும் பற்றுள்ளவர் இல்லை. முதியவர்கள் தாய்மார்கள் இளைஞர்கள் மாற்றுத்திறனாளிகள் - கைம்பெண்கள் என்று யாரையும் நலப்பணிகளில் விட்டு வைக்கவில்லை. எல்லோருக்குமான திட்டங்களைத் தீட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

2021 மே மாதம் ஆட்சி பொறுப்பேற்றபோது, தமிழ்நாட்டின் நிலை என்ன? எங்கு பார்த்தாலும் கொரோனா பெருந்தொற்று. இவர் கொரோனா பெருந்தொற்றை சமாளிப்பாரா? என்ற ஒரு கேள்வி எழுந்தது. அதற்குப் பிறகு,10 ஆண்டுகள் கஜானாவில் கொள்ளை அடிக்கப்பட்டு காலியான வெற்றிடம்.10 ஆண்டுகளாக எல்லாவற்றையும் வழித்தெடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர். கஜானா காலி. இவர் எவ்வாறு இந்த நிர்வாகத்தை நடத்தப்போகிறார்? என்ற அடுத்த கேள்வி.

**கலைஞர் பாணியில் வெற்றி பெற்றிருக்கிறார்!**

ஆனால், கொரோனாவையும் முறியடித்தார்; நிதி மேலாண்மையையும் முறியடித்தார் நம்முடைய முதல்வர். இதுதான் அவருக்குள்ள மனிதநேயம். மக்களுக்கு செய்ய வேண்டும்; மக்களுக்கு நலப்பணிகளை சமூக நலத்திட்டங்களை கொண்டு வர வேண்டும் என்று அவருடைய இயற்கையான இயல்பான ரத்தத்தில் இருப்பதால், முத்தமிழறிஞர் கலைஞருடைய பாணியில் அவர் வெற்றி பெற்றிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, 'இன்னுயிர் காப்போம் - நம்மைக் காப்போம்48 திட்டம்'. இங்கு எவ்வளவு பெரிய மனித நேயம் இருக்கிறது? தமிழ்நாட்டில் நாமெல்லாம் சாலையில் பயணம் செய்திருக்கிறோம். விபத்தில் ஏற்பட்டு, 'குற்றுயிரும் குலையுயிருமாய்' அங்கங்கே பிணங்கள் கிடக்கும்; கை,கால்கள் உடைந்து இருப்பார்கள். எந்த மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றாலும், நீங்கள் முதலில் பணத்தை கட்டுங்கள் என்று சொல்வார்கள். அடுத்தது, நீங்கள் முதல் தகவல் அறிக்கை பெற வேண்டும் என்று சொல்வார்கள். மூன்றாவது, இது என்னுடைய காவல்துறை எல்லை கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை; நீங்கள் அடுத்த காவல் நிலைய கட்டுப்பாட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள் என்று சொல்லுவார்கள்.

ஆனால் ஒரே ஒரு வரியில், யார் விபத்தில் காயம் அடைந்தாலும் விபத்தில் சிக்கினாலும் 48 மணி நேரம் அவர்களை உயிரை பாதுகாக்கின்ற பொறுப்பு தமிழ்நாட்டு அரசுக்கு இருக்கிறது என்ற ஒரு ஆணையைப் பிறப்பித்தாரே, அங்குதான் மனிதநேயம் இருக்கிறது. இந்த ஆணையின் மூலமாக என்னென்ன ஏற்பட்டது? இந்தத் திட்டத்தில் தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப் பட்டிருக்கிறது. இதுதான் மனித நேயம்.

நம்முடைய தாய்மார்கள் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால், சில இடங்களில் மூன்று வேலை சரியான உணவு அருந்துகிறார்களா என்று தெரியாது. ஆனால், முதலமைச்சர் அவர்கள் 'உரிமைத்தொகை' என்று ஆயிரம் ரூபாய், உங்கள் வீட்டுச் சீதனம் உங்களுடைய பணம் நான் கொடுப்பேன் என்று வாக்குறுதி அளித்தார். அதை நிறைவேற்றி இருக்கிறார்.

அனைவரும் கேட்கிறார்கள். வாக்குறுதி கொடுத்தாரே, நிறைவேற்றினாரா? என்று. 90 விழுக்காடு வாக்குறுதிகளை மூன்றரை ஆண்டுகளில் நிறைவேற்றி இருக்கிறார். எந்த மாநிலத்திலாவது கொடுத்த வாக்குறுதிகள் மூன்றரை ஆண்டுகளில் 90 விழுக்காடு நிறைவேற்றப்பட்டு இருக்கிறதா? என்று சொல்ல சொல்லுங்கள்.

நாங்களும் கர்நாடகாவில் ஆட்சி செய்கிறோம்; தெலுங்கானாவில் ஆட்சி செய்கிறோம்; இமாச்சலப் பிரதேசத்தில் ஆட்சி செய்கிறோம்; ஜார்க்கண்டில் கூட்டணி ஆட்சி அமைந்திருக்கிறது. வாக்குறுதியாக 'Guarantee Scheme' என்று 5 அறிவித்தோம்; நடைமுறைப்படுத்தினோம்.

ஆனால், தமிழ்நாட்டில் என்ன வித்தியாசமான நலப்பணிகளும் மனிதநேயப் பணிகளும் நடக்கிறது என்றால், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டோம். அதோடு முடித்துக் கொள்ளலாம். ஆனால், தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றன?

கொரோனா பெருந்தொற்று காலத்தில் மக்கள் எல்லாம் வீட்டை விட்டு வெளியே வர முடியவில்லை. என்ன என்று ஆய்வு செய்தபோது, கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூட்டு வலி இருக்கிறது; உடல் உபாதை இருக்கிறது; மருத்துவமனைக்குச் செல்ல முடியவில்லை என்று கேள்விப்பட்டவுடன், அவர் 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தை ஆரம்பித்து, நீங்கள் நேரடியாக வீடுகளுக்கு சென்று அவர்களுக்கு மருத்துவ உதவி செய்யுங்கள் என்று சொன்னார். இதுதான் 'மக்களைத் தேடி மருத்துவம்'.

அதுமட்டுமல்ல, சிறார்கள் மாணவ - மாணவிகள், கொரோனா பெருந்தொற்று காலத்தில் கல்வியை தொடர முடியவில்லை. மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது என்று கேள்விப்பட்டவுடன், அப்போது மக்களைத் தேடி மருத்துவம்போல, 'இல்லம் தேடிக் கல்வி' என்ற திட்டத்தை கொண்டு வந்தார். இதெல்லாம் எந்த வாக்குறுதியில் கொடுக்கப்பட்டது? எந்த வாக்குறுதியும் சொல்லவில்லையே.

**வாக்குறுதிகளை நிறைவேற்றிய முதல்வர்!**

இப்போது எதிர்க்கட்சிகள், நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டீர்களா என்று கேட்கிறார்களே... இந்தியாவில் கொடுத்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றி, அதற்குப் பிறகு சொல்லாததையும் நிறைவேற்றி இருக்கிற முதலமைச்சர்தான் நம்முடைய முதலமைச்சர் என்று இந்தியா பேசுகிறது.

காலை உணவு திட்டத்தைப் பற்றி சொல்ல வேண்டும். காலை உணவு திட்டத்தில் 20 லட்சத்து 53ஆயிரம் குழந்தைகள் தினமும் காலையில் உணவு அருந்துகிறார்கள்.

ஒருமுறை தெலுங்கானாவில் இருந்து முன்னாள் முதலமைச்சர் இங்கே வருகிறார். அவருடைய அதிகாரிகளை அமைச்சர்களை அனுப்பி, காலை உணவு திட்டம் எவ்வாறு சாத்தியம் என்று ஆய்வு செய்தார். இப்போது இருக்கும் நம்முடைய தலைமைச் செயலாளர், அப்போது நிதிச் செயலாளர். அனைவரையும் அணுகி, இதை நாங்கள் தேர்தலுக்குள் தெலுங்கானாவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று, மூன்று மாத காலத்தில் தெலுங்கானாவில் நடைமுறைப்படுத்தினார்கள். இப்போது காங்கிரஸ் ஆட்சி வந்தவுடன், அதை விரிவுபடுத்தி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, கனடாவில் இந்தத் திட்டத்தை அமல்படுத்தியிருக்கிறார்கள்; நடைமுறைப்படுத்தி யிருக்கிறார்கள் என்றால், இந்த மனிதநேயம், தமிழ்நாட்டின் முதலமைச்சரால் தமிழ்நாட்டைக் கடந்து தெலுங்கானாவில் சேர்ந்து கனடா வரை செல்கிறது என்றால், இது எப்படிப்பட்ட உன்னதமான திட்டம்! இது எவ்வாறு நம்முடைய முதலமைச்சருக்கு தோன்றியது? எந்தக் குழந்தையும் என்னுடைய ஆட்சிக்காலத்தில் பசியால் பட்டினியால் வாடக்கூடாது; அவர்களுக்கு உணவளிப்பேன் என்று இந்தத் திட்டத்தை தீட்டினாரே, அங்குதான் மனிதநேயம் உயர்ந்து நிற்கிறது.

'இருமொழி கொள்கை'- ஏற்கனவே, ஜவஹர்கலால் நேரு காலத்தில் இருந்து அன்னை இந்திரா காந்தியைத் தொட்டு -மன்மோகன் சிங் ஆட்சி வரை இருக்கிறது.

'மும்மொழி கொள்கை'யை நடைமுறைப்படுத்துகிறீர்களே... மிகப்பெரிய நிதி நெருக்கடி இருக்கிறது. எவ்வளவு நிதி மேலாண்மையில் ஆட்சியை நடத்தி இருந்தாலும், ஒரு விதத்தில் சங்கடங்கள் இருக்கத்தான் செய்யும். பலவீனத்தை பார்த்து அடித்தால் வீழ்ந்துவிடுவார்கள் என்று சொல்வார்கள். தமிழ்நாட்டிற்கு நிதி நெருக்கடி இருக்கிறது. இந்த நிதி நெருக்கடியை வைத்து, நீங்கள் முன்மொழிக் கொள்கையில் கையொப்பமிட்டால்தான், நாங்கள் உங்களுக்கு கொடுக்க வேண்டிய பள்ளிக்கல்வித் துறைக்கான ரூ.2,350 கோடியை நாங்கள் தருவோம் என்று மிரட்டி பார்த்தார் மோடி.ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான், "கையொப்பிட்டால் பணம்; இல்லை என்றால் சென்று வாருங்கள்" என்று சொன்னார்.

**அடுத்த தலைமுறையை பாதுகாக்கும் முதல்வர்!**

அவர்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டில் எவ்வளவு பெரிய திட்டங்களை சமூக நலத்திட்டங்களை அறிவித்திருக்கிறார்; இதை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வளவு பெரிய சங்கடங்கள் இருக்கின்றன; எவ்வளவு நிதி மேலாண்மை செய்தாலும், பற்றாக்குறை இருக்கத்தானே செய்கிறது என்று. ஒரே ஒரு வார்த்தை சொன்னார் முதலமைச்சர், 'தமிழ்நாட்டு மக்களின் நலனிலும் அவர்களுடைய எதிர்காலத்திலும் எந்தக் காலத்திலும் சமாதானம் செய்து கொள்ள முடியாது. ரூ.2,350 கோடி இல்லை, நீங்கள் 10 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும், இந்தத் தலைமுறையையும் அடுத்த தலைமுறையையும் பாதுகாக்கின்ற இடத்தில் நாங்கள் இருக்கிறோம் என்று அறிவிப்பு செய்தார். இதுதான் நம்முடைய முதலமைச்சருக்கும் மற்ற முதலமைச்சர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

இன்றைக்கு, நம்முடைய ஆளுநர் ஷா நவாஸ் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் துரை வைகோ எல்லாம், எல்லாவற்றையும் சொன்னார்கள். இது நீதிமன்றத் தீர்ப்பு.

நான், நேற்றைக்கும் இன்றைக்கும் குஜராத்தில் மோடி பிறந்த மண்ணில் இருந்தேன்.

இந்தத் தீர்ப்பைப் பற்றி, முன்னாள் முதலமைச்சர் இந்நாள் முதலமைச்சர் முன்னாள் ஒன்றிய அமைச்சர்கள் என்று எல்லோரும் இந்தத் தீர்ப்பைப் பற்றி பேசுகிறார்கள்.

இந்தத் தீர்ப்பை பெறுவது அவ்வளவு சாதாரணமான விஷயம் அல்ல. சமாதானம் செய்து கொள்ளாமல் எந்த நிர்பந்தத்திற்கும் ஆளாகாமல் தமிழ்நாட்டு உரிமைகளுக்காக போராடியே தீர்வேன் என்று உச்சநீதிமன்றம் வரை ஏறி முதலமைச்சர் வெற்றி பெற்றாரே, இந்தியாவில் தமிழ்நாட்டின் பெருமை தமிழர்களின் பெருமை தலை நிமிர்ந்து நிற்கிறது. இதுதான் முதலமைச்சர்.

கேட்ட இடங்களில் எல்லாம் மிரட்டி மிரட்டி கையெழுத்து வாங்கினார்களே... நீட்ஆ, வா கையெழுத்து போடு; உதய் மின் திட்டம்ஆ, வாருங்கள் கையெழுத்து போடுங்கள்; ஜி.எஸ்.டி.ஆ வாருங்கள் கையெழுத்து போடுங்கள். இது நான்காண்டுகளுக்கு முன்பு. அனைத்து சமாதானமும் செய்து, தமிழ்நாட்டு நலன்களை தமிழ்நாட்டு எதிர்காலத்தை தமிழ்நாட்டு உரிமைகளை விட்டுக் கொடுத்தவர் காட்டி கொடுத்தவர்கள் யார்? என்பது மக்களுக்கு தெரியும்.

**தாங்கிக்கொள்ள முடியவில்லை!**

ஓராயிரம் ஆண்டு,இரண்டாயிரம் ஆண்டு தமிழர்களின் வரலாறு என்று சொல்லப்பட்டது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள், உலகத்திலேயே மூத்த குடி தமிழ் குடி என்று பொருநை வரலாற்றையும் கீழடி வரலாற்றையும் புரட்டிப் போட்டு இருக்கிறார். இதை எல்லாம் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தமிழ்நாடு மக்களுக்கும் தமிழர்களுக்கு இவ்வளவு பெரிய நாகரிகம் இருக்கிறது என்பது எந்த காலத்தில் சொல்லப்படுகிறது? நம்முடைய முதலமைச்சர் தளபதி காலத்தில் சொல்லப்படுகிறது.

இவ்வளவு காலமாக சமஸ்கிருதம் பெரியது என்று ஏமாற்றிக் கொண்டு இருந்தார்கள். புள்ளி விபரத்தோடு, இங்கிருந்து கார்பன் டெஸ்ட் என்று சொல்வார்கள். அந்த ஆய்வுக்காக அமெரிக்காவிற்கு அனுப்பி கொண்டு வந்து, தமிழர்களின் வரலாறு என்ன? தமிழர்கள் எவ்வளவு மூத்த குடிகள்? என்பதை ஆய்வு செய்து பகுப்பாய்வு செய்து, உலகத்திற்கு அந்தச் செய்தியை அனுப்பியவர் நம்முடைய முதலமைச்சர்.

**நீராதாரம் பாதுகாப்பு!**

இந்த 4 ஆண்டுகளாக சென்னையில் நடைபெற்றிருக்கும் பணிகள்,4,978 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன். இந்தப் பணிகளால், மழை வந்தால் தண்ணீர் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில் சென்று விடுகிறது. ஆனால், இன்னும் பணிகள் நிறைவு பெறவில்லை. இதற்கு மேல் ஒன்று நாம் சிந்திக்க வேண்டும்.

எல்லோரும் அடுத்த தேர்தலை பற்றி சிந்திக்கும் அரசியல்வாதிகள். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தலில் வாக்கு சேகரிக்க வேண்டும்; வெற்றி பெற வேண்டும்; ஆட்சி அமைக்க வேண்டும் என்று. ஆனால், நம்முடைய முதலமைச்சர் அடுத்த தேர்தலை பற்றி சிந்திப்பதில்லை. அடுத்த தலைமுறையை பற்றி சிந்திக்கிறார். இதுதான் எல்லோருக்கும் இவருக்கும் உள்ள வித்தியாசம்.

**உரிமையை விட்டுக் கொடுக்க மாட்டேன்!**

நீ, ஈ.டி. அனுப்புகிறாயா? சி.பி.ஐ. அனுப்புகிறாயா? ஐ.டி. அனுப்புகிறாயா? யாரை வேண்டுமானாலும் அனுப்பு. என்னுடைய மக்களின் உரிமையை நான் ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டேன். என்னுடைய மக்கள்தான் பெரியது; ஆட்சி பெரியது அல்ல. எல்லாவற்றிலும் என்னுடைய மக்களின் அடுத்த தலைமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்று சிந்தித்து செயல்படுகின்றவராக நம்முடைய முதலமைச்சர் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

உங்களுக்கு எல்லாம் தெரியும், 'விடியல் பயணம்'. என்னுடைய தொகுதியில் மக்கள் எல்லாம் சொல்கிறார்கள், 'காலையில் எழுந்து கொள்கிறேன்; குழந்தையை பள்ளியில் விட்டுவிடுகிறேன்; சமையல் செய்ய வேண்டியதில்லை; வேலைக்கு செல்கிறேன், அங்கே சாப்பிட்டு விடுகிறேன்; விடியல் பேருந்து; செலவுக்கு பணம்தேவையில்லை, மாதா மாதம் ஆயிரம் ரூபாய்; அதற்கான திட்டங்கள் முதலமைச்சர் கொண்டு வந்திருக்கிறார். அதனால் ஒவ்வொரு குடும்பத்திலும் மகிழ்ச்சி சிரிப்பு பொலிவு இந்த 4 ஆண்டுகளாக தெரிகிறது என்றால், இவ்வளவு காலமாக ஏன் நீங்கள் செய்யவில்லை?

மின்சார கட்டணம் உயர்ந்திருக்கிறது என்று எதிர்க்கட்சிகள் சொல்கிறார்கள். அதற்கு யார் காரணம்? ஜெயலலிதா இருக்கும் போது உதய் மின் திட்டத்தில் கையொப்பமிடவில்லையே... மோடி மிரட்டி கையொப்பமிடுங்கள் என்றவுடன், நீங்கள் ஏன் அந்தத் திட்டத்தில் கையொப்பமிட்டீர்கள்.



**அடிமை வசனம் எழுதி கொடுத்த எடப்பாடி!**

இன்று ஜி.எஸ்.டி.யில் நமக்கு வர வேண்டிய தொகை 30 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் நிலுவையில் இருக்கிறது. ஜி.எஸ்.டி.யில் அந்த அம்மையார் கையொப்பமிட வில்லையே... நீங்கள் ஏன் கையொப்ப மிட்டீர்கள்? எதற்காக அவர்களுக்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுத்தீர்கள்? தமிழ்நாட்டு மக்களின் உரிமையை எதற்காக விட்டுக் கொடுத்தீர்கள்?

வருகின்ற தேர்தல், தேர்தல் இல்லை;அது திருவிழாவாக இருக்கப்போகிறது. இந்த மனிதநேயத்திற்கான அடையாளம் மனிதநேயத்திற்கான அங்கீகாரம் மனிதநேயத்திற்கான மீண்டும் ஒரு ஆட்சி. அந்த ஆட்சி எப்படிப்பட்ட ஆட்சி! உங்கள் ஆட்சி. அப்படிப்பட்ட ஒரு ஆட்சியை மீண்டும் மீண்டும் நடத்திக் கொண்டிருப்பவர்.

அதனால்தான், நான் கூட்டணிக் கட்சியை பற்றி பேசும்போது சொல்வேன், 'இந்த இந்தியா கூட்டணி தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் இருக்கிறது என்றால், இது எஃகு கோட்டை போன்ற கூட்டணி. இதை யாரும் அசைத்துப் பார்க்க முடியாது. கேரளாவில் உள்ளதுபோல, இன்னும் 25 ஆண்டுகள் இந்தக் கூட்டணி தொடர வேண்டும். இந்தக் கூட்டணி தொடர்ந்து வெற்றி பெற்றால் தான், தமிழ்நாட்டு மக்களின் முகத்தில் மகிழ்ச்சியை பார்க்க முடியும்.

5 ஆண்டுகள் போதாது. 5 ஆண்டுகள் அனைத்துப் பணிகளையும் முடித்து விட முடியாது. ஒவ்வொரு துறையிலும் அமைச்சர்களுக்கு பயிற்சி கொடுத்து, எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும்? எவ்வாறு நிர்வாகம் நடத்த வேண்டும்? என்று முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு அமைச்சரையும் எவ்வாறு கையாளுகிறார் என்பதை நாங்கள் பார்க்கும்போது வித்தியாசமாக இருக்கும்.

நம்முடைய இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரை எடுத்துக் கொள்ளுங்கள். இதற்கு முன்பு, அனைத்து கோவில்களுக்கும் ஆலயங்களுக்கும் சென்றிருப்பீர்கள். நான் கடந்த வாரம் பழனிக்கு ஒரு ஆய்வுக்காக சென்றிருந்தேன். அங்கு மக்களிடம் கேட்டோம். எங்கள் வேலையே, ஆய்வுக்கு செல்லும் போது மக்களை சென்று விசாரிப்பதுதான்.

**பாதுகாப்பு - சுகாதாரம்!**

"என்னம்மா... எப்படி இருக்கிறது கோவில்? இந்த ரோப் கார் எவ்வாறு இருக்கிறது?". இல்லைங்க... கடந்த ஆட்சியில் அது அறுந்து விழுந்து நிறைய பேர் இறந்து விட்டார்கள். இப்போது அமைச்சர் ஒரு புதிய திட்டத்தை கொண்டு வந்து, பாதுகாப்பாக சிறப்பாக செய்திருக்கிறார். முதலில் பாதுகாப்பு.

இரண்டாவது சுகாதாரம். உணவு சாப்பிடும் இடத்திற்கு சென்றோம்.அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் சாப்பிடுகிறார்கள். பழனி முருகன் கோயில் சாப்பாடு எப்படி இருக்கிறது? என்று,நாங்களும் அங்கேயே உட்கார்ந்து சாப்பிட்டோம்.அனைவரும் நம்முடைய அமைச்சர் எவ்வாறு அந்தக் கோவில்களை ஆலயங்களை கையாளுகிறார்?

அதிகாரிகளும், பொதுமக்களும் ஆந்திராவில் இருந்து வந்திருந்தார்கள். என் பக்கத்தில் ஆந்திராவில் இருந்து உட்கார்ந்திருந்தார்கள். இந்தப் பக்கம் வேறொரு மாநிலத்திலிருந்து உட்கார்ந்தி ருந்தார்கள். கேரளாவிலிருந்து முன்னாடியே உட்கார்ந்திருந்தார்கள். அறுபடை வீடுகளில் ஒன்றான பழனி முருகன் கோவிலுக்கு கேரளாவில் இருந்துதான் 60,70 விழுக்காட்டுக்கு மேல் வருவார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னார்கள்,"எங்களுக்கு குலதெய்வமே பழனி முருகன்தான். ஆனால், இந்த 4 வருடங்களாக மகிழ்ச்சியாக இருக்கிறது; வித்தியாசமாக இருக்கிறது; நிர்வாகம் நன்றாக இருக்கிறது; உணவு நன்றாக இருக்கிறது; பஞ்சாமிர்தம் நன்றாக இருக்கிறது; அனைத்தும் நன்றாக இருக்கிறது" என்கிறார்கள்.

**தமிழ்நாட்டு மக்களுக்கு விடியல்!**

எனவே, பக்தி இயக்கங்களால் செய்ய முடியாததை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு அமைச்சர், எங்கள் பகுதியில் பிறந்து எங்கள் பகுதியில் வளர்ந்து, இந்த முருகனின் அனைத்து பலன்களையும் மக்களுக்கு கொண்டு செல்கிறார் என்றால், இது தமிழ்நாட்டின் பெருமை; தமிழ்நாட்டு மக்களின் விடியல் என்று சொல்ல வேண்டும்.

எத்தனை கோவில்களுக்கு நீங்கள் கும்பாபிஷேகம் செய்தீர்கள்? சட்டப்பேரவையில் பட்டியலிட்டு சொல்லுகிறார். உங்கள் ஆட்சியில் எவ்வளவு கும்பாபிஷேகம் செய்தீர்கள்? எங்களுடைய அமைச்சர் எத்தனை ஆலயங்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறார்!நீங்கள் ஒரு கோவிலுக்கு ஒரு லட்சம் ரூபாய் என்றீர்கள்.வந்தவுடன், அதனை 2 லட்சம் ரூபாய் ஆக்கினார். இப்போது 2 லட்சத்து 50 ஆயிரம் ஆக்கியிருக்கிறார்.

**அறநிலையத் துறையின் பொற்கால வளர்ச்சி!**

காலனி பகுதியில் – ஆதிதிராவிடர் மக்கள் வாழும் பகுதிகளில், கோவில்களை குளங்களை பார்ப்பதற்கு நாதியில்லாமல் இருக்கும். அதிகாரிகள் செல்வார்கள், அந்த ஊரோடு முடித்துவிட்டு வந்து விடுவார்கள். ஆனால், காலனியிலும் ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதியிலும் கும்பாபிஷேகம் செய்யப்படும்; கோவில்கள் சீரமைக்கப்படும்; குளங்கள் வடிவமைக்கப்படும் என்ற திட்டங்களை தமிழ்நாடு முழுவதும் செய்து வருகிறாரே, பக்தி இயக்கமா இது? நீங்கள், பெயருக்கு பக்தி இயக்கம் நடத்துகிறீர்கள்... அந்தப் பக்தி இயக்கங்களில், குறிப்பிட்டவர்கள்தான் ஆலயத்திற்குள் நுழைய முடியும். தந்தை பெரியாரின் ஆலய பிரவேசத்திற்கு பிறகு, அனைவரும் செல்லலாம் என்று படிப்படியாக ஒரு வளர்ச்சி வந்தது.

ஆனால் பொற்கால வளர்ச்சி என்பது, நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் பொறுப்பேற்ற பிறகு, அனைத்து இறைவனும் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்; மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்.

உங்களுக்குத் தெரியும். யார் வேலை திருடினார்கள்? வேலை திருடிவிட்டு, அந்த வேலுக்காக பாதயாத்திரை சென்றவர் யார்? அவ்வாறெல்லாம் இப்போது எங்காவது பார்க்க முடிகிறதா? இதெல்லாம் எந்த ஆட்சியில் நடந்தது? ஆனால், இங்கு வேலும் இருக்கிறது; கருணையும் இருக்கிறது; மனிதநேயமும் இருக்கிறது. இந்த மனிதநேயத்தின் பண்பாளர்தான் நம்முடைய முதலமைச்சர் தளபதியார் அவர்கள். மிகவும் கருணையுடையவர்.

**வல்லவர் - நல்லவர்!**

நான் ஒரு நண்பரிடம் பேசினேன்,"முத்தமிழறிஞர் கலைஞருக்கும் இவருக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டார். நான் சொன்னேன், "முத்தமிழறிஞர் கலைஞர் வல்லவர். "அப்போது இவர் யார்?". "மிகவும் நல்லவர்" என்றேன். இரண்டையும் சொல்லுங்கள் என்றார்."நம்முடைய முதலமைச்சரை வல்லவர் நல்லவர் என்று இரண்டையும் வைத்துக் கொள்ளுங்கள்" என்றேன்.

அவ்வாறு என்றால், நம்முடைய முதலமைச்சரின் பண்புகள் என்ன?அனைவரும் பேசுவார்கள். ஜவஹர்லால் நேரு இருந்தார்; ஜவஹர்லால் நேருவை மிஞ்சிவிட்டார் அன்னை இந்திரா காந்தி. அன்னை இந்திரா காந்தி இறந்தார்கள்; ராஜீவ் காந்தி ஒரு படி மேலே சென்றார். இப்போது அவருடைய பெயரன் ராகுல் காந்தி இருக்கிறார்; அவர் அதற்கு மேல் ஒரு படி மேல் சென்று ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தங்களை எதிர்த்து கொண்டிருக்கிறார்.

மனிதநேயம் அனைவரும் சமம் ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்பதை பற்றி கடுமையாக நாடாளுமன்றத்தில் உரையாற்றி இருக்கிறார். நான் பழைய கட்டுரைகள் - புத்தகங்கள் எல்லாம் படிக்கும்போது, 'சாக்ரட்டீஸ் இருந்தார்; பிளாட்டோ இருந்தார்; அரிஸ்டாட்டில் இருந்தார். ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொருவர் பரிணாம வளர்ச்சியில் எல்லோரையும் மிஞ்சி இருந்தார்கள். இப்போது அனைவரையும் விஞ்சி மிஞ்சி தமிழ்நாட்டு மக்களின் பாதுகாவலராக –மனிதநேயராக இருப்பவர் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள்.

இப்போது அனைவரும் சொன்னார்கள், இந்தத் தீர்ப்பால் ஓங்கி நிற்கிறார்; இந்தத் தீர்ப்பால் இந்தியா முழுவதும் பார்க்கப்படுகிறது என்று. இந்தியா முழுவதும் அவர் எப்போதே ஓங்கி நின்றுவிட்டார்; எப்போதோ உயர்ந்து நிற்கிறார்.

**ராகுல்காந்தி கொடுத்த இனிப்பு!**

அதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன், 'கடந்த மே மாதம் நாடாளுமன்றத் தேர்தல். எங்களுடைய தலைவர் ராகுல் காந்தி திருநெல்வேலி பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு, ஹெலிகாப்டரில் நானும் அவரும் மதுரைக்கு வந்து, மதுரையிலிருந்து தனி விமானத்தில் கோயம்புத்தூர் வந்தோம். அவ்வாறு விமா னத்தில் வரும்போது கேட்டார், "ஸ்டாலின் வெற்றி பெற ஏதாவது கொடுக்க வேண்டும்" என்றார்.

அப்போது, கோயம்புத்தூரில் விமான நிலையத்தை தாண்டியவுடன் ஒரு இனிப்பு கடை இருந்தது. அங்கு சென்று வண்டியை நிறுத்தச் சொல்லுங்கள். இனிப்பு வாங்கலாம் என்றார். அங்கு சென்று பார்த்தால், அது சாதாரண கடை. எந்த திட்டமிடலும் கிடையாது. பார்த்தவுடன், இது நல்ல ஸ்வீட்ஆ என்று சாப்பிட்டு பார்த்து சொல் என்றார். சுமாரான ஸ்வீட் தான், ஸ்ரீ கிருஷ்ணா, அடையார் ஆனந்த பவன் மாதிரி இருக்காது என்றேன். வேறு ஏதாவது கடையை பார்ப்போமா என்றார். நானும் பார்ப்போம் என்றேன். வண்டி சென்று கொண்டே இருக்கிறது. இன்னொரு 'யு' டர்ன் அடித்து, ஸ்பீட் கடையையே அரை மணி நேரம் தேடிக் கொண்டிருக்கிறோம்.

இறுதியில் நல்ல ஸ்வீட் கடை வந்தவுடன், வாங்கினார். அவரே பாக்கெட்டில் இருந்த ஆயிரம் ரூபாயை எடுத்து கொடுத்தார். ஒரு கிலோ ஸ்வீட் வாங்கிக் கொண்டு, இதை என்னுடைய அண்ணனுக்கு கொடுக்கப் போகிறேன் என்று வந்தார். திடீரென்று ஒரு சந்தேகம் கேட்டார். இதை நாம் அன்பாக கொடுக்கிறோம். அவருக்கு சுகர் ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டார்.'He is Perfectly Alright'. அவருக்கு சுகர் எல்லாம் கிடையாது. சுகர் அவரைவிட்டு ஓடிப் போய்விடும்.காலையில் நடைப் பயிற்சி; வாரம் ஒரு முறை சைக்கிள் பயிற்சி என்று அனைத்தும் செய்து கொண்டிருக்கிறார் என்றேன். அதனை வந்தவுடன் கொடுத்தார்.

இதற்கிடையில், அவர் வந்தது; அந்தக் கடைக்குள் சென்றது; திரும்பி வந்தது; இடையில் மதில் சுவரைப் போலசென்டர் மீடியனை ஏறிக் குதித்து சென்றது; அவரே கையில் காசு கொடுத்து வாங்கியது அனைத்தும், வீடியோவாக அனைத்து தொலைக் காட்சிகளிலும் வெளியே வந்துவிட்டது. அவர் பேசும்போது சொன்னார்,'நான் எல்லோரையும் அண்ணனாக ஏற்றுக் கொண்டதில்லை. ஆனால், உங்களை நான் அண்ணனாக ஏற்றுக் கொள்கிறேன்' என்று ராகுல் காந்தி சொன்னாரே...

**உச்சநீதிமன்றம் தீர்ப்பு!**

4, 5 தேர்தல்களில் தொடர்ந்து வெற்றி பெறுகிறோம் என்றால், இங்கிருந்துதான் திட்டங்கள் இந்தியா முழுவதும் செல்கிறது; இங்கிருந்துதான் சுயமரியாதை நகர்கிறது; இங்கிருந்துதான் சமூக நீதி நகர்கிறது; இங்கிருந்துதான் ஒன்றிய அரசுக்கு எதிராக மாநில கூட்டாட்சி தத்துவத்தை எப்படி உறுதிப் படுத்த வேண்டும் என்ற நடைமுறையும் நகர்கிறது; அதுதான் நேற்றைய உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு.

அனைவரும் நினைத்தார்கள், இவர் உச்சநீதிமன்றத்தில் என்ன சாதிக்க முடியும்? அனைவரும் மோடி பாக்கெட்டில் இருக்கிறார்கள். ஆனால், அவர் ஒவ்வொரு விதமாக கையாளும் விதத்தை பார்க்க வேண்டும். எடுத்தேன், கவிழ்த்தேன் என்று இல்லை.

பாட்டாளி மக்கள் கட்சிக்கு 10.5 விழுக்காடு இட ஒதுக்கீடு தருகிறோம் என்று எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். எதற்காக? தேர்தல் கூட்டணிக்காக; எதற்காக? வாக்குகளை பெற வேண்டும் என்பதற்காக. உச்சநீதிமன்றம்,'இது சரியல்ல, தவறு. நீங்கள் ஆய்வு செய்யவில்லை. இதை நீங்கள் சரியாக கையாளவில்லை' என்று ரத்து செய்துவிட்டது.

ஆனால், முத்தமிழறிஞர் கலைஞர் எத்தனை இட ஒதுக்கீடு கொண்டு வந்திருக்கிறார்? அருந்ததியினருக்கு உள் ஒதுக்கீடு உள்ளிட்ட பல இட ஒதுக்கீடுகளை கொண்டு வந்திருக்கிறார். ஆனால், உச்சநீதி மன்றத்தால் அதை ரத்து செய்ய முடியவில்லை.

அதேபோன்றுதான், நம்முடைய முதலமைச்சர். இட ஒதுக்கீடு ஆகட்டும்; சட்டதிட்டம் ஆகட்டும்;அனைத்திற்கும் ஆய்வு செய்து பகுத்தாய்வு செய்து, ஒவ்வொன்றாக அடுத்த தலைமுறைக்கு இது நகர வேண்டும் என்பதை காய் நகர்த்தி நேற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

இந்தியா முழுவதும் ஒரே பேச்சு. கூட்டாட்சி தத்துவம் செத்துக் கொண்டிருக்கிறது. மோடி நசுக்கி கொண்டிருக்கிறார். அரசமைப்புச் சட்டம் கேள்விக்குறி ஆகிக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் யார் முடிவு கட்டுவார்கள்? யார் அந்த தேவ தூதன்? யார் அந்த இறைவன்? இப்படி எல்லாம் புலம்பிக்கொண்டி ருக்கும்போது, நான் இருக்கிறேன். உச்சநீதிமன்றத்தில் இந்தச் தேசத்தை பாதுகாப்பதற்காக தீர்ப்பை வாங்குவேன் என்று வாங்கியிருக்கிறார்.

**எல்லோருக்குமான ஆட்சி இது!**

தமிழ்நாட்டுக்கு மட்டுமான தீர்ப்பு அல்ல இது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கும் சேர்த்துதான். உதாரணமாக, உத்தரபிரதேசத்தில் யோகி இருக்கிறார். அவர் மோடிக்கு எதிரான குரூப். அங்கிருக்கும் ஆளுநர், மோடியின் ஆள். அவரை சித்திரவதை செய்து கொண்டிருக்கிறார். இப்போது யோகியே சொல்லப்போகிறார், 'நான்பா.ஜ.க. முதலமைச்சர்தான். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதலமைச்சர் நம்மை எப்போதுமே திட்டிக் கொண்டிருப்பவர் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும், கூட்டாட்சி தத்துவத்தை நிலை நாட்டுவதற்கும், ஜனநாயக சக்தியின் தலைவனாக ஒரு தீர்ப்பை வாங்கியிருக்கிறார். நீயே என்னை மிரட்ட முடியாது' என்று சொல்லப்போகிறார். இதுதான் ஜனநாயகம்; இதுதான் எல்லோருக்குமான ஆட்சி; இதுதான் இந்திய தேச மக்களை தலை நிமிர வைத்திருக்கும் தீர்ப்பு.

எவ்வளவு பேர் நேற்றையிலிருந்து தூங்காமல் இருந்திருப்பார்கள் என்று எனக்கு தெரியாது. அனைவருக்கும் வயிற்றெரிச்சல். மோடி அவர்களே, இலங்கைக்கு செல்கிறீர்களா? கச்சத்தீவிற்கு என்ன செய்யப் போகிறாய் என்று தீர்மானத்தை கொண்டு வருகிறார். நீ இலங்கைக்கு சென்று, வெறும் கையோடு திரும்பி வந்தாயா? தமிழ்நாட்டு மீனவர்கள் நலனில் உனக்கு அக்கறை இல்லை. நான் அறிவிக்கிறேன் என்று, அந்த மீனவ மக்களுக்கு திரைப்படத்தில் வரும் மீனவ நண்பன் அல்ல; உண்மையான மீனவன் நண்பன் என்று.578 கோடி ரூபாய்க்கு அறிவிப்பைச் செய்திருக்கிறார். இதுதான் மனிதநேயம்; இதுதான் மாண்புமிக்க தலைவர்கள்.

தமிழ்நாட்டு மக்களை தன்னுடைய கண்ணாக பார்த்து பாதுகாத்துக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டு முதலமைச்சரை, இன்னும் ஏராளமாக மணிக்கணக்கில் பேசிக்கொண்டே செல்லலாம். ஒவ்வொரு திட்டங்களும் மணியான திட்டங்கள். தேர்தலுக்கான திட்டங்கள் அல்ல, அடுத்த தலைமுறை எப்படி தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்; அடுத்த தலைமுறை எப்படி செழிப்போடு நலமோடு வளமோடு வாழ வேண்டும் என்பதற்காக தீட்டப்படுகின்ற திட்டங்கள்.

அடுத்த முதலமைச்சராக யார் வந்தாலும், அடுத்த தலைமுறைக்கு எந்தத் திட்டமும் போட முடியாது. அனைத்தையும் தமிழ்நாட்டு மக்களுக்கு கொடையாக கொடுத்திருக்கிறார்.

இங்கு ஆளுர் ஷா நவாஸ் பேசும்போது சொன்னார், 'ஒரு வேளை தப்பித்தவறி அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தாலும் கூட, இந்த தீர்ப்பு அவர்களுக்கு உதவும்' என்றார். இந்த மனிதர்கள் மண்ணில் உள்ளவரை,ஒருபோதும் அ.தி.மு.க.ஆட்சிக்கு வருவதற்கு வாய்ப்பே இல்லை; வாய்ப்பே கிடையாது.

தமிழ்நாடு அரசுக்கு எதிராக எவ்வளவு அநீதிகளை பா.ஜ.க. செய்து வருகிறது? ஒரு பக்கம், கட்சியில் பதிவியில் இருக்கும் பா.ஜ.க. தலைவர் ஒரு முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி. இன்னொரு பக்கம், ஆளுநராக ஒரு முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி. இரண்டு பேரையும் விட்டு, எவ்வளவு பெரிய சங்கடத்தையும் துன்பத்தையும் கொடுக்க முடியுமோ, அனைத்தையும் கொடுத்து பார்த்தீர்கள். எதற்கும் அடிபணியாதவர்.

அவர் சொன்னார், 'ஆளுநர், சட்டப்பேரவையில் நாங்கள் எழுதிக் கொடுத்ததைதான் பேச வேண்டும்'. பெரும்பான்மை மக்களால் கொண்டுவரப்பட்ட ஆட்சி. பெரும்பான்மை மக்களால் வாக்களித்து, நீங்கள்தான் முதலமைச்சர்; உங்களுடைய அமைச்சரவை; ஐந்தாண்டுகளுக்கு நீங்கள்தான் ஆட்சி செய்ய வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் தீர்ப்பளித்து இருக்கிறார்கள்.

அவர்கள் எழுதிக் கொடுப்பதை நீங்கள் படிக்க வேண்டும். நான் விட்டுவிட்டு படிப்பேன்; புத்தகத்தில் ஒரு பக்கத்தை காணும் என்று சொன்னால், அதற்கு உரிய பதிலடியை கொடுத்து,'ஆளுநர் பேசியது அவைக் குறிப்பில் நீக்கப்படும்' என்று சொன்னாரே, எந்த மாநிலத்திலாவது ஒரு முதலமைச்சர் ஆளுநரைப் பார்த்து இவ்வாறு பேசி இருக்க முடியுமா? துணிச்சலான முடிவு எடுத்திருக்க முடியுமா?

பள்ளி மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரைக்கும் மிகப்பெரிய மகிழ்ச்சி கொண்டாட்டம். நாங்கள் எந்த காலத்தில் வாழ்கிறோம்? எந்த மாநிலத்தில் வாழ்கிறோம்? எப்படிப்பட்ட முதலமைச்சர் எங்களுக்கு கிடைத்திருக்கிறார்? என்று. இன்னும் குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் மனிதநேயம் மிக்க நம்முடைய முதலமைச்சர், அதே பதவியில் இருப்பார்; தமிழ்நாட்டு மக்களின் துயரங்களை தீர்ப்பார் என்று சொல்லி, இந்த அருமையான ஏற்பாடு செய்து என்னை அழைத்த, என்னுடைய அருமை அண்ணன் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும், பக்தி இயக்கத்தை முறியடித்து, உங்கள் பயணம் தொடர வேண்டும்... தொடர வேண்டும் என்று சொல்லி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. பேசினார்.



நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை முன்னிட்டு அவரது திரு உருவப்படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நகர செயலாளர்கள் நாகை இரா.மாரிமுத்து, நாகூர் எம்.ஆர்.செந்தில்குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.ஆர். குலோத்துங்கன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை தலைவர் இரா.தங்கதுரை,நாகை நகர கழக நிர்வாகிகள் அபுபக்கர், பி.திலகர், வெற்றிலை கடை சிவா, ரமணி, சித்ராகுலோத்துங்கன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.